RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
DOI: 10.34256/irjt224s1969
OPEN ACCESS

# விவேக சிந்தாமணி உணர்த்தும் அறம்

## து. விஜயராணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) பெரம்பலூர்-621212, தமிழ்நாடு, இந்தியா

# Virtues in Viveka Chintamani

## D. Vijayarani [a, *]

[a] Department of Tamil, Dhanalakshmi Srinivasn College of Arts&Science for Women (Autonomus), Perambalur-621212, Tamil Nadu, India

* Corresponding Author: vijayaranidharmaraj@gmail.com

Received: 11-08-2022
Revised: 28-09-2022
Accepted: 13-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Viveka Chintamani brings out many wise ideas. In this worldly life, man has to deal with the four essentials in life virtue, wealth, pleasure, and home. Tamil people followed good principles in their life and gained enough wealth through these virtues. When a man leads a guilt free life. It is called virtue. Even a man cannot do good things to others, it does not matter but he should not do evil things. A man should cultivate good humane character and be grateful. Humans must be kind to all living things. Love is considered as the main characteristic of all virtues. One should live like a musk deer. The ancient Tamil sages gave their own life for pride and praises. Those people always welcomed and entertained their guests. It is also known that the king's people followed great moral values in their life. They followed the principles of Periyar. This article examines the virtues mentioned in Viveka Chintamani.

**Keywords:** Viveka Chintamani, Ideas, Character, Life, Pleasure, Home

## முன்னுரை

விவேக சிந்தாமணி என்பது ஒரு பழமையான தமிழ் நூல். இது பழமையான மூதுரைகளைக் கொண்ட தமிழ் நூல். இதன் காலமும் இதன் ஆசிரியர் பெயரும் அறியப்படவில்லை. பல்வேறு வகையான அறக்கருத்துகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும். விவேக சிந்தாமணி பட்டறிவு, பகுத்தறிவு இரண்டின் தெளிவாக விளங்குகின்றது. நினைவில் ஒளிரும் மணி போன்றது. சிந்தாமணி பகுத்தறிவின் மணிகளே விவேக சிந்தாமணி. விவேக சிந்தாமணியில் 135 பாடல்கள் உள்ளன. இவை கூறும் அறக்கருத்துகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

அறம் என்ற சொல்லுக்கு விடை காண்பது மிகவும் கடினமானது. அறு என்ற வினைச்சொல்லின் அடியாகப் பிறந்தது அறம் என்னும் சொல். இச்சொல்லுக்கு அறுத்துச்செல். வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் வழங்கி வழங்கப்படுகின்றது. இத்தகைய சொல்லாட்சிகளைப் பார்க்கும் பொழுது. மனிதன் தனக்கென வகுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறம். இதனை நீதி நூல்களுள் ஒன்றான உலக பொதுமறை என்று அனைவராலும் போற்றப்படக்கூடிய திருக்குறள்.

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்

ஆகுல நீர பிற”

என்ற குறளின் மூலம் அறம் என்ற சொல்லாட்சிக்கு விளக்கம் அளிக்கின்றது (Parimelzhagar, 2017). ஒரு மனிதனை நல்லவனாகவும் தீயவனாகவும் மாற்றுவது அவனது மனம். எனவே மனதில் மாசு இல்லாமல் வாழ்வதே சிறந்த அறம் ஆகும் என எடுத்துரைக்கின்றது விவேக சிந்தாமணி.

## அன்பு தலையாயது

மனித நேயம் இரக்கம் பாசம் ஆகியவற்றை குறிக்கம் சொல்லே அன்பு. மற்றொருவரின் மீது நாம் வைத்திருக்கும் உண்மையான அக்கறை அன்பு என்று கூறலாம். அன்பை அடக்கி வைத்தல் இயலாது. அவ்வன்பு கண்ணாக வெளிபடும். அன்பு உணர்ச்சி மற்றும் மனநிலை சார்ந்த அனுபவத்தையும் உணர்வையும் கொடுக்கின்றது. அதனால் தான் வள்ளுவர்,

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும்"

என்று எடுத்துரைக்கின்றார் (Parimelzhagar, 2017). இத்தகைய அன்பின் ஆழத்தை,

"தன்மானங் குலமானந் தன்னைவந்

தடைந்தவுயிர் தங்கண் மானம்

என்மான மாகிலென்ன வெல்லவரும்

சரியெனவே யெண்ணும் போது

நன்மானம் வைத்தெந்த நாருமவர்

தங்களுக்கு நன்மை செய்வோர்

மன்மானி யடைந்தொரைக் காக்கின்ற

வள்ளலென வழுத்த லாமே"

என்ற பாடல் தாம் செய்த செயலின் வாயிலாக விளைந்த பெருமைக் குணம் தங்களை நம்பி வந்தவர்களின் உயிரைவிட உயர்வாக மதிக்கப்படுகின்றது (Kadhir Murugu, 2008). பிறருடைய மானத்தையும் தன்னுடைய மானமாக நினைத்து செயல்படவும், பிறர்மேல் நல்லுணர்வும், இரக்கமும் கொண்டு வாழும் சிறந்தக் குணமுடையவர்கள், அருள் உடையவர்கள் ஆகியவற்றை போற்றி வணங்கலாம். உலக உயிர்கள் மேல் அன்பு, அருள். ஈகை குணம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். அதற்கு தலையாதது அன்பே ஆகும் என்று அன்பின் பெருமையை எடுத்துரைக்கின்றது.

## தீய வழியை விலக்க வேண்டும்

மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் இவ்வுலகில் பல நன்மை தீமைகளைச் சந்தித்து வாழ வேண்டும். நாம் நல்லவழியில் சென்று நல்ல செயல்களைச் செய்தால் மட்டுமே அவற்றால் நல்ல பலன்களை வாழ்வில் எதிர்பார்க்க முடியும். அதனால்தான் நம் முன்னோர்கள் வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்று கூறியுள்ளனர். நாம் நன்மையைச் செய்தால் நன்மை அடைய முடியும். தீய வழியில் சென்று நன்மை அடைய முடியாது. எனவே தீய வழியை விடுத்து நன்மையே செய்ய வேண்டும் என்பதை

"தன்னுடன் பிறவாத் தம்பி தனைபெறாத் தாயார் தந்தை

அன்னிய ரிடத்துச் செல்வமரும்பொருள் வேசியாசை

மன்னிய வேட்டின் கல்வி மறுமனை யாட்டி வாழ்க்கை

இன்னவாங்கரும மெட்டு மிருகத்துக் குதவா தன்றே"

என்ற பாடல் வழி நல்ல வழியில் சென்று நல்ல செயல்களை செய்தால் மட்டுமே அவற்றால் நல்ல பலன்களை வாழ்வில் எதிர்பார்க்க முடியும். அதனை விடுத்துத் தீயவழியில் சென்று நம்மை அடைய முடியாது. என்பதனை எடுத்துரைக்கின்றது. என தீயவழியில் செல்வதை தவிர்க்க வேண்டும் என்கிறது (Kadhir Murugu, 2008).

## மானம்

ஒழுக்கத்தில் சிறந்தது மானம். மனிதனின் பண்பு நலன்களில் ஒன்றாக மானம் கருதப்படுனிக்றது. மானம் எனப்படுவது ஒழுக்கத்தோடு வாழ்வதைக் குறிக்கும். சங்க காலத்தில் மானம் போயின் வடக்கிருந்து உயிரைமாய்க்கும் பழக்கம் உண்டு. மயிர் நீப்பினும் வாழா கவரிமான் என்ற கூற்றிற்கு ஏற்ப மானத்தோடு வாழ்ந்தவர்கள் சங்க சான்றோர்கள். எப்பொழுதும் புகழையே விரும்புவர். இதனை.

“மானமுள் ளோர்க டங்கள் மயிரறி னுயிர்வா ழாத

கானுறு கவரி மான்போற் கனம்பெறு புகழே ழுண்பார்

மானமொன் றில்லார் தாமும் மழுங்கலாய்ச் சவங்களாகி

ஈனமாங் கழுதைக் கொப்பா யிருப்பரென்றுரைக்க லாமே”

என்ற பாடலின் வழி விவேக சிந்தாமணி மானத்தின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது. மேலும் கழுதைக்கும் ஒப்புமைக் கூறுகின்றது (Kadhir Murugu, 2008).

வாழ்வில் எக்காலத்திலும் தாங்கள் நின்ற நிலையில் இருந்து தாழக்கூடாது அதுவே மானம் என்று சொல்லப்படும். தன்நிலையில் இரந்து தாழ்ந்து போகுவது பிறருடைய ஏச்சுக்கும் இழிவான சொற்களுக்கும் ஆளாக்குகின்றது. இதனால் உயர்ந்தவர் புகழ் மங்கும். இதனை.

“சங்குவெண் டாமரைக்குத் தந்தைதா யிரவி தண்ணீர்

அங்கதைக் கொய்துவிட்டா லழுகச்செய்து அந்நீர் கொல்லும்

துங்கவெண் கரையிற் போட்டால் சூரியன் காய்ந்து கொல்வான்

தங்களின் நிலைமை கெட்டா லிப்படித் தயங்கு வாரே”

என்ற பாடலில் சங்குபோன்ற வெண்மை நிறமுடைய தாமரை மலருக்குச் சூரியனும் தண்ணீரும் அன்னை தந்தையாக இருந்தாலும் தாமரை மலரைப் பறித்துவிட்டால் நீரே அதனை அழுகச் செய்து அழித்துவிடும் (Kadhir Murugu, 2008). சூரியன் மலரை வாடசெய்து விடும். அதுபோல உயர்ந்தவர்கள் தன் நிலையில் இருந்த தாழ்ந்தால் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆழாவார்கள் என்பதனை தெளிவுபடுத்துகின்றது. இக்கருத்தினை நாலடியாரும்

“பாவமும் ஏனைப்பழியும் படவருவ

சாயினும் சான்றவர் செய்கலார் - சாதல்

ஒருநாள்ஒரு பொழுதைத் துன்பம் அவைபோல்

அருநவை ஆற்றுதல் இன்று”

மானமுடையோர் மானத்தால் உண்டாகும் இன்பமே இன்பம். வறுமையிலும் இரவாமை வேண்டும் என்று மானம் குறித்து மிகவும் கடுமையாக எடுத்துரைக்கின்றது (Chandran, 2000).

## ஈகைக் குணம்

மனித பண்புகளுள் ஒன்று ஈகையாகும். ஒரு பொருளும் இல்லாத வறியவர்க்கு எவ்வித பிரதிபலனும் எதிர்பாரமல் ஒரு பொருளைக் கொடுத்து உதவுவதே ஈகை எனப்படும்.

“இம்மி அரிசித் துணையானும், வைகலும்,

நும்மில் இயைவ கொடுத்து உண்மின்”

என்ற அடிகளின் மூலம் வலியுறுத்தப்படுகின்றது (Chandran, 2000). மேலும் பிறருக்கக் கொடுத்து உதவுபவன் இம்மை மறுமை இரண்டிலும் நற்பயன் அடைகின்றான். பிறருக்கு கொடுத்து உதவ முடியவில்லையென்றாலும் பிறரிடம் சென்று யாசகம் கேட்காமல் இருப்பதே கொடுப்பதைக் காட்டிலும் இரு மடங்கு பயன் தரும் என்றச் சிறந்த கருத்து விளக்கப்படுகின்றது.

“மருத்தபா வாணர் தக்கோர் மறையவ விரப்போரக் கெல்லாம்

கொடுத்துயார் வறுமையுற்றோர் கொடாது வாழ்ந் தவதார் மண்மேல்

எடுத்துநா டுண்ட நீருமெடாதகாட் டகத்து நீரு

மடுத்தகோ டையிலே வற்றி யல்லதிற் பெருகுற் தானே”

என்ற பாடலின் மூலம் தன்னை நெருங்கி வாழும் வித்துவான்கள் உயர்ந்த சான்றோர்கள் வேதம் ஓதும் அந்தணர்கள் ஆகியோருக்குக் கொடுத்து உதவுவதனால் யாரும் வறுமை நிலை அடைவதில்லை (Kadhir Murugu, 2008). அவர்களுக்குக் கொடுக்காமல் பொருள்களை எல்லாம் தனதாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் தொடர்ந்து வாழ்ந்ததும் இல்லை. அனைவரும் உண்ணும் நன்னீர்க்குளமும் காட்டில் உண்ணுவாரற்று நீர் பெருகியிருக்கும் ஏரியும் கோடையில் காய்ந்து கார் காலத்தில் நீர் நிறைந்து காணப்படும். அதுபோல மற்றவர்களுக்குக் கொடுக்க கொடுக்க செல்வம் பெருகும் என்பதனை எடுத்துரைக்கின்றது.

“கதிர்பெறு செந்நெல் வாடக் கார்குலங் கண்டு சென்று

கொதிநிரைக் கடலிற் பெய்யுங் கொள்ளைபொல் குவலலித்தே

மதிதனம் படைத்

த பேர்கள் வாடினோர் முகத்தைப் பாரார்

நிதிமிகப் படைத்தோர்க் கீவார் நிலையிலார்க் கீயமாட்டார்”

ஒருவர் செல்வம் பெற்றதன் பயன் செல்வம் இல்லாதவர்க்குக் கொடுத்து உதவுவதாகும். ஆனால் செல்வம் பெற்றவர்கள் தங்களைப்போல செல்வம் படைத்தவர்களுக்குக் கொடுத்து உதவுகின்றனர் (Kadhir Murugu, 2008). இதனால் எவ்வித பயனும் இல்லை. செல்லத்து பயனே ஈதல். எனவே இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவக்கூடிய பண்பினை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதனை விவேக சிந்தாமணி வலியறுத்துகின்றது.

## விருந்திடும் முறை

விருந்து என்பதற்கு புதுமை என்று பொருள். தமிழர்களின் பண்பாடுகளில் இன்றியமையாதது விருந்தோம்பல். தமது இல்லத்திற்கு வந்துள்ள விருந்தினர்களை வரவேற்கும் முறைகளிலும் உபசரிக்கும் முறைகளிலும் பல்வேறு வகையான நெறிகள் உள்ளன. அவற்றை சிறப்புற செய்தலே விருந்து எனப் பண்டைய நூல்கள் எடுத்துரைக்கின்றன.

‘மருந்தே ஆயினும் விருந்தோடு உண்’ என்ற ஔவையார் கூற்றிற்கு இணங்க நாம் உண்கின்ற உணவைப் புதிதாய் வருகின்றவர்களுக்கும் கொடுத்து உபசரிக்கும் பண்பு தமிழர்க்கு உரியதாகும். தம்முடைய இடத்திற்கு வரும் விருந்தினர்களை உபசரிப்பது மட்டும் விருந்தாகாது. முகம் மலர்ந்து வரவேற்றல் இன்சொல் பேசுதல், கால்கழுவ நீர் கொடுத்தல், மனை பாய் முதலிய ஆசனங்கள் தருதல் அவர்களுக்குப் படுக்கை வசதி செய்து தருதல் எனப் பல உபசரிப்பு முறைகள் உணரும். இதனை,

“முறுவல் இனிதுரை கால்நீர் மணைபாய்

கிடக்கையோடு இவ்வைந்தும் என்ப தலைச் சென்றார்க்கு

ஊனோடு செய்யும் இறப்பு”

என்ற பாடலின் வழி ஆசாரக்கோவை எடுத்துரைக்கின்றது (Peruvain Mullaiyar, 2019).

“ஒப்புடன் முகம லர்ந்தே யுபசரித் துண்மை பேசி

உப்பில்லாக் கூழிட்டாலு முண்பதே யமிர்தமாகும்

முப்பழ மொடுபாலன்னம் முகங்கடுத் திடுவராயின்

கப்பிய பசியினொடு கடும்பசி யாகுந்தானே”

அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவில் முகத்தில் புன்னகை கொண்டு இனிமையான சொற்களைப் பேச வேண்டும். முகம் மலர்ந்து உபசரிக்க வேண்டும் உப்பு இடப்படாத கூழை உணவாகக் கொடுத்தாலும் அது உண்பவர்களுக்குச் சாவா மருந்தாகிய அமுதமேயாகும். அவ்வாறன்றி மா. பலா. வாழை என்னும் முக்கனிகளுடன் உயர்ந்த அரிசி கொண்டு சமைத்த உணவை முகத்தில் இனிய நோக்கம் இல்லாமல் உதட்டில் இனிய சொற்கள் இல்லாமல் ஒருவருக்கு உணவுக் கொடுத்தால் அதனை உண்பவருக்குப் பசி அதிகமாகுமே தவிரக் குறையாது என விருந்தினரை உபசரிக்கும் முறையினை எடுத்துரைக்கின்றது. செல்விருந்து ஓம்பி வருவிருந்து காத்திருக்கும் தன்மையுடையோர் தமிழர்கள் என்பதனை எடுத்துரைக்கின்றது (Kadhir Murugu, 2008).

## பெரியோர் நட்பு

ஒருவரிடம் நட்புக் கொள்ள வேண்டும் எனில் அவரைப் பற்றி அறிவால் ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு தெரிந்துக்கொண்ட பின்பு நட்புக் கொள்ள வேண்டும். பெரியோர்கள் ஒருவரைப் பற்றி ஆராய்ந்து அறியாமல் நட்புக் கொள்ள மாட்டார்கள். நட்புக் கொண்டபின் அவருடைய பண்பு நலன்களை ஆராய்ந்து கொண்டிருக்க மாட்டார்கள். அதுவே சான்றோரின் நட்பு முகம் மட்டும் மலரும் படியாக நட்புச் செய்யாமல் அகமும் மலரும் படியாக நட்பு செய்வர். பெரியோர்களின் நட்பு என்பது நாள்தோறும் வளர்பிறைப் போன்று வளரும் தன்மையுடையது. நட்புக் கொண்ட பிறகு அந்நட்பைப் பிரிதல் கூடாது.

“விலங்கேயும் தம்மோருடனு றைதல் மேலும்

கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா இலங்கருவே

தாசு யிழியு மலைநாட இன்னாதே

பேயோ டானும் பிரிவு”

விலங்காக இருந்தால்கூட அது தன்னுடன் கலந்த உறவைப் பிரிவதில்லை (Mundruaraiyaanar, 2016). எனவே நட்புக் கொண்ட பின்பு அது பேயாக இருந்தாலும் அந்நட்பைப் பிரிக்கக் கூடாது என்று பழமொழி கூறுகின்றது. கேட்டதைக் கொடுக்கும் தன்மையுடையது கற்பக மரம். அத்தகைய கற்பக மரத்தைச் சாரந்து இருக்கும் காக்கையும் அமுதத்தினை உண்ணும். அதுபோல சிறந்த அறிவுப் படைத்த தலைவனைச் சேர்ந்திருக்கும் எளியவர்க்கும் நல்வாழ்வினை பெறுவர். ஆனால் இளவம் பஞ்சு கனியாகும் என்று காத்திருக்கும் கிளியைப் போல சிறுமைக் குணம் உடையவர்களை சார்ந்து வாழ்ந்தோம் என்றால் அது துன்பத்தைத் தரும் பெரியோர் நட்பு இன்பத்தைத் தரும் என்பதனை.

“கற்பகத் தருவைச் சார்ந்த காகமு மமுத முண்ணும்

விற்பன விவேக முள்ள வேந்தரைச் சேர்ந்தோர் வாழ்வார்

இப்புவி தன்னி லென்றும் இலவுகாத் திடுங்கி ளிபோல்

அற்பரைச் சேர்ந்தோர் வாழ்வ தரிதரி தாகு மம்மா”

என்ற பாடலின் வழி நாம் கொள்ளும் நட்பு மேன்மை மிக்கதாக இருத்தல் வேண்டும். அதனால் சான்றோர்களைச் சார்ந்து இருத்தல் வேண்டும். சான்றோர்களின் சேர்க்கை நம்மை துன்பத்தில் இருந்து

காக்கும். அறிவற்ற கீழ்மக்களின் நட்புத் துன்பத்தையே தரும். எனவே பெரியோரைத் துணையாகக் கொள்ள வேண்டும் என விவேக சிந்தாமணி வலியுறுத்துகின்றது (Kadhir Murugu, 2008).

## நட்பில் அவமதிப்பு கூடாது

ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு நட்புக் கொண்ட பின்பு ஏதோ ஒரு சூழ்நிலையில் பிரிய நேரின் ஒருவரை ஒருவர் தூற்றி அவமதிப்பு செய்தல் கூடாது. அவமதிப்பதற்காக தீமைதரும் செயல்களைச் செய்யக் கூடாது என்பதனை.

“ஆதியா மிருவர் நட்புக் கவமதிப் புற்றவர்க்குள்

சூதினால் கபடஞ் செய்து துணைபிரிந் திடுவ ரென்றால்

வேதியன் பவளவாயில் வேசைதாய் பச்சை நாவி

யூதிய கதைபோ லாகி உறுநர செய்து வாரே”

என்ற பாடலில் நட்பில் அவமதிப்பு கூடாது என்பதனை எடுத்துரைக்கின்றது (Kadhir Murugu, 2008).

## தீயோர் நட்பை தீது

நல்லோர் கொண்ட நட்பானது வளர்பிறைப் போன்று நாள்தோறும் வளரும் தன்மையுடையது. பழக பழக இனிமை தரக்கூடியது. ஆனால் தீயோர் நட்பு என்பது தேய்பிறைப் போன்று தேயக்கூடியது. ஒருவருடைய நல்ல குணங்களையும் அவருடைய புகழையும் பெருமையினையும் அறிந்த அவரோடு மனம் ஒன்றுபட்டுக் கொண்டால் வாழ்கின்ற வாழ்வானது நன்மையினைத் தரும். ஆனால் சகுனியைப்போல் தீமையான குணம் கொண்டு தீயவர்களின் நட்பினை நாடினால் மேலும் மேலும் பாவங்கள் வந்து சேரும். எனவே தீயவர்களின் நட்பினை நாடக்கூடாது என்பதனை,

“அருமையும் பெருமை தானு மறிந்துடன் படுவர் தம்மால்

இருமையு மொருமை யாகி யின்புறந் கேதுவுண் டாம்

பிரிவிலாச் சகுனி போலப் பண்புகெட் டவர்கள் நட்பால்

ஒருமையி னரக மெய்து மதுவே யுயரு மன்னோ”

என்ற பாடலின் வழி தீய குணம் கொண்டவர்களின் நட்புத் தீமை விளைவிக்கும் தன்மையை உடையதாகும். எனவே தீயவர் நட்புத் தீமையைத் தரும் என எடுத்துரைக்கின்றது (Kadhir Murugu, 2008).

## வாய்மை

மனிதன் பல நிலையற்ற இன்பங்களுக்காக வாய்மை என்னும் அறத்தை மறந்து பொய்மையை நாடிச் சென்றுக் கொண்டிருக்கிறான். உண்மையைப் பேசுவதே நற்பண்பாகும். மக்கள் பல நேரங்களில் பொய்யின் துணைக்கொண்டு செல்வச் செழிப்போடு வாழ்வில் பல இன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர். வாய்மையைப் தூற்றி பொய்மையைப் போற்றி வருகின்றனர்.

“வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை”

என்ற பாடல்வரி செல்வமுடையவராய் இருத்தலைவிட உண்மையைப் பேசும் வாய்மையுடையவராய் இருத்தல் வாழ்க்கையின் பெருஞ்செல்வம் (Kudaloor Kilar, 2012). அதுவே வாழ்வை வளமாக்கும் என்பதனை.

“மெய்யதைச் சொல்வ ராகில் விளங்கிடு மேலும் நன்மை

வையக மதனைக் கொள்வார் மனிதரிற் றேவ ராவார்

பொய்யதைச் சொல்வா ராகில் போசன மற்ப மாகும்

நொய்யர்தாமிவர்க ளென்று நோக்கிடா ஏறிவுள் ளாரே”

என்ற பாடல் உலகில் உண்மை பேசி வாழ்பவர்கள் எப்போதும் புகளுடன் திகழ்வார்கள் (Kadhir Murugu, 2008). அவர்கள் முதலில் துன்பம் அடைபவர்கள் போல் தோன்றினாலும் அவர்களுக்கு நன்மையை பேசுபவர்களின் நற்குணத்தைக் கண்டு அவர்களைப் போற்றி வணங்குவர். மேலும் உண்மை பேசுபவர்களைத் தெய்வமாக மதித்துப் போற்றுவர். பொய் பேசுவர் முதலில் இன்பத்தை அனுபவத்தாலும் பின்பு பிறரால் ஏசப்படுவர் அவர்கள் கயவர்களுக்கு ஒப்பாவர். எனவே உண்மையைப் பேசி வாழ்வதே மக்கட் பிறப்பின் சிறப்பாகும். இல்லை எனில் பொய் கூறவதால் பழி நேரும் என்று விவேக சிந்தாமணி எடுத்துரைக்கின்றது.

## நடுவு நிலைமை

சான்றோர்கள் நடுவநிலைமையோடு இருத்தல் வேண்டும். சமன் செய்து சீர்தூக்கும் துலாக்கோல் போல் சான்றோர்கள் நடுவுநிலைமையோடு செயல்பட வேண்டும். பசுவின் கண்ணீரைத் தீர்ப்பதற்காக தனது மகனையே தேர்க்காலில் இட்ட மனுநீதி சோழனும் புறாவிற்காக தனது தொடையை அறுத்துகொடுத்த சிபி சக்கரவர்த்தியும் வாழ்ந்த இந்நாட்டில் சான்றோர்க்கும் அவர்கள் வழி நின்று சான்றோர்கள் நடுவு நிலைமையோடு நடந்து கொள்ள வேண்டும்.

நடுவு நிலைமை ஓர் உயர்ந்த குணம், பண்பு, நடுவுநிலைமை, நடுவநிலைப் பண்பு நீதியைச் சார்ந்தது. நீதி உயிர் நடுவு நிலைமை என்பது எல்லா குணங்களுக்கும் தாய் போன்றது. ஏழ்மைநிலையில் வாடும் மக்கள் கொண்டுவந்த வழக்காக இருந்தாலும் அந்த வழக்கினை ஆராய்ந்து அறிந்து நீதி சொல்பவர்களே தூய்மையானவர்கள் அவர்கள் சிறப்புடன் வாழ்வார்கள். ஆனால் வழக்கினை ஆழ விசாரிக்காமல் ஒருதலையாகத் தீர்ப்புக் கூறுபவர்கள் கண்கள் குருடாகி உலகில் வாழும் மனிதர்களுக்கு ஒப்பாக கருதப்படுபவர் ஆவார். இதனை

“நாரிகள் வழக்க தாயினும் நடுவறிந் துரைப்பார் சுத்தர்

ஏரிபோல் பெருகி மண்மே விருகணும் விளங்கி வாழ்வார்

ஓரமே சொல்வா ராகி லோங்கிய கிளையு மாண்டு

தீரவே கண்ணி ரண்டும் தெரியாது போவார் தாமே”

என்ற பாடலின் வழி வழக்கைக் கொண்டு வந்தவர்கள் எளியவர்களாக இருந்தாலும் நடுவுநிலையில் நின்று நன்றாக விசாரித்து அறிந்த பின் நீதி வழங்க வேண்டும். ஒருதலைப்பட்சமாக, நீதி வழங்குதல் கூடாது என்று எடுத்துரைக்கின்றது (Kadhir Murugu, 2008).

## ஒழுக்கம்

தனி மனிதர் ஒவ்வொருவரும் வாழ்வில் ஒழுக்கமுடன் இருப்பது வேண்டற்பாலது. ஒழுக்கமுடைமையை வலியுறுத்திப் பல்வகையான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. நீதிநூல்கள் ஒழுக்கத்தினால் எய்தும் மேன்மையினையும் அதன் சிறப்பினையும் தெள தெளிவாக எடுத்து இயம்புகின்றது.

கல்வியும் ஒழுக்கமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றது. ஒழுக்கமுடன் இருத்தலே ஒருவருக்கு இருக்க வேண்டிய உயர்ந்த குணமாகும். உத்தமனாய் வாழ வேண்டும் என்பதனை,

“இழுக்கமுடைய பாட்டிற்கு இசைநன்று சாலும்

ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று - வழக்குடைய

வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சாத்

தாரத்தின் நன்று தனி”

இப்பாடலில் இலக்கணப் பிழைகளை உடைய பாடலைக்காட்டிலும் வெறும் இசையே நன்றாகும் (Narayanaswami, 2011). உயர்ந்த குலத்தைக் காட்டிலும் மாட்சிமையுடைய ஒழுக்கமே சிறந்ததாகும். வழக்குடைய வீரத்தைவிட நீங்காத நோயே சிறந்தது என்று ஒழுக்கமுடைமையின் தன்மையினை எடுத்துரைக்கின்றது. இக்கருத்தினை,

“ஆசாரஞ் செய்வா ராகி லறிவொடு புகழு முண்டாம்

ஆசாரம் நன்மை யானா லவனியிற் றேவ ராவார்

ஆசாரஞ் செய்வா ராகி லறிவொடு புகழு மற்றுப்

பேசாற்போற் பேச்சு மாகிப் பிணியொடு நரகில் வாழ்வார்”

என்ற பாடலின் மூலம் தாங்கள் செய்யக்கூடிய செயல்களை ஒழுக்கம் தவறாமல் செய்பவர்களுக்கு நல்லறிவுடன் புகழும் உண்டாகும். நல்லொழுக்கம் நிறைந்து உலகில் வாழ்பவர்கள் உலக மக்களால் தெய்வமாக மதிக்கப்படுவார்கள் செய்யும் செயல்களில் ஒழுக்கம் தவறினால் அறிவும் புகழும் கெட்டு உலகில் ஊமைபோல் பேசாத நிலையினை அடைய நேரிடும் வாழ்கின்ற பிறவியில் நரகில் உழன்று மறுபிறவியிலும் நரகத்தை அடைவார்கள். ஒழுக்கமே உயர்வு தரும் என்றும் நற்செயல்களைச் செய்து ஒழுக்கமுடன் வாழ்பவர்கள் அனைவராலும் புகழப்படுபவர் ஒழுக்கம் இல்லாதவர்கள் துன்பத்தையே அடைவார்கள் என எடுத்துரைக்கின்றது (Kadhir Murugu, 2008).

## நன்றி மறவாமை

எந்நன்றி கொன்றாருக்கும் இவ்வுலகத்தில் உய்வு உண்டு, ஆனால் ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்களுக்கு மீட்பு என்பது இல்லை. இப்பண்பு தமிழனின் தலை சிறந்த பண்பு. பிறர் தனக்குச் செய்த நன்றியை யாரும் மறத்தல் கூடாது. பெரிய அறங்களைச் சிதைத்தவர்களுக்கும் கழுவாய் உண்டு. ஆனால் ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்களுக்கு கழுவாய் இல்லை என்பதனை,

“ஆன்முலை அறுத்த அறன் இல்லோர்க்கும்

மாண்இழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்

குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்

வழுவாய் மருங்கில் கழுவாயும் உளஎன

நிலம் புடைபெயர்வது ஆயினும் ஒருவன்

செய்நன்றி கொன்றோர்க்கு உய்தி இல்என

அறம் பாடிற்றே ஆயிழை கணவ!”

என்ற பாடலின் மூலம் பசுவின் மடியை அறுத்து பெரும் பாவம் செய்தவர்க்கும் பெண்ணின் தாய்மை, பண்பை அழித்த கொடுமை, செய்தவர்க்கும் அந்தப் பாவத்தில் இருந்து விடுபட வழி உண்டு. ஆனால் செய்த நன்றியைக் கொன்றவர்களுக்கு அந்தப் பாவத்தில் இருந்து விடுபட வழியில்லை என்று எடுத்துரைக்கின்றது (Manickavasagan, 2008).

“வல்லியந் தனைக்கண்டஞ்சி மரந்தனி வேடன்

கொல்லிய பசியைத் தீர்த்து ரட்சித்த குரங்கைக் கொன்றான்

நல்லவன் றனக்குச் செய்த நலமது மிக்க தாகும்

மல்லர்கட மக்குச் செய்தா லுயிர்தனைப் போக்கு வாரே”

என்ற விவேக சிந்தாமணி பாடல் தமக்கு இக்கட்டான நேரத்தில் உதவிச் செய்தவர்க்கு எவ்வித தீமையினையும் செய்யக்கூடாது என அறியுறுத்துகின்றது (Kadhir Murugu, 2008).

## முடிவுரை

இலக்கியங்கள் பல அறங்களை எடுத்துரைக்கின்றது. மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் வாழ்வில் பல அறங்களை பின்பற்றி வாழ்கின்றனர். பிறருக்கு நம்மால் நன்மை செய்ய இயலாவிட்டாலும் தீமை செய்ய கூடாது என்பதனை எடுத்துரைக்கின்றது. நன்றியுடைமைஇ அன்புஇ மானம்இ வாய்மை போன்ற பல அறங்களை கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதனை இதன் வழி அறிய முடிகின்றது.

## References


Chandran, J. (2000) Naladiyar moolamum Thelivurai, Varthaman Pathippagam, Chennai, India.

Kadhir Murugu, (2008) viveka sinthamani, Karpagam Puthagaalayam, Chennai, India.

Kudaloor Kilar, (2012) Mozhumozhi Kanchi moolamu uraiyum, Saradha Pathippagam, Chennai, India.

Manickavasagan, (2008) Purananuru Mollamum Uraiyum, Uma Pathippagam, Chennai, India

Mundruaraiyaanar, (2016) Palamozhi Nanuru mollamum uraiyum, Saradha Pathippagam, Chennai, India.

Narayanaswami, G.P. (2011) Needhikalanjiyam, New Century Book House, Chennai, India.

Parimelzhagar, (2017) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Peruvain Mullaiyar, (2019) Aasarakovai Mollamum Uaiyum, Saradha Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License